# மரக்கால்

## (ந்யாயவேதாந்த வித்வான் வாகம்ருதவர்ஷீ வேளுக்குடி ஸ்ரீ உ.வே.வரதாசார்யஸ்வாமி)

பரமாசார்யரான ஆளவந்தார் அருளிச்செய்த ஸ்ரீகீ₃தார்த்த₂ஸங்க்₃ரஹத்தில் 32 ஶ்லோகங்கள் உள்ளன. அவற்றில் ''ப₄க₃வத்₃ த்₄யாந யோகே₃ாக்தி வந்த₃ந ஸ்துதி கீர்த்தநை: லப்₄த₃ாத்மா'' என்பது முப்பதாவது ஶ்லோகமாகும். அதில் ''யோக₃'' ஶப்₃த₃த்தாலே கூறப்பட்ட ஓரர்த்த₂த்தை ஈண்டு சற்று விஸ்தரமாகக் கூறுகிறேன்.

ஸ்ரீமந்நாத₂முநிகள் குலம் சொட்டைக்குலமாகும். இது ஶ்ரேஷ்ட குலம் என்றபடி. ''அருள்பெற்ற நாதமுநி'' என்று உபதேசரத்தினமாலையில் மணவாள மாமுனிகள் அருளிச்செய்தார். காட்டுமன்னார்குடி மன்னனார் அருள்பெற்ற நாத₂முநி என்றும், நம்மாழ்வார் அருள்பெற்ற நாத₂முநி என்றும் இருவகையாகவும் பொருள் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீமந் நாத₂முநிகளுக்கு நம்மாழ்வார் அருள்புரிந்து நாலாயிரம் உரைத்தார் என்பது ஸ்ரீவைஷ்ணவ கு₃ருபரம்பராப்ரப₄ாவத்தில் கூறப்பட்ட விஷயம் ஸுப்ரஸித்₃த₄மானதொன்று. இந்தச் சொட்டைக்குலத்தில் நம்மாழ்வார் அபி₄மாநமே காரணமாக ப₄க₃வான் விஶேஷித்து அக்குலத்திலுதித் தாரை விஶேஷகடாக்ஷம் பண்ணினன் என்பது ப்ரஸித்₃த₄ம். ''யத்ர க்ருஷ்ண: க்ருதாத₃ர:'' என்று யதிராஜஸப்ததியில் தே₃ஶிகன் அருளிச்செய்தார். யாமுநாசார் யரை ப₄க₃வான் விஶேஷித்து அபி₄மாநித்தான் என்பது குருகைக்காவலப் பனிடத்தில் யோக₃ரஹஸ்யம் உபதே₃ஶம் பெற ஆளவந்தார் எழுந்தருளிய போது அப்பனை அநுப₄விக்கிற ப₄க₃வான் அவரையும் அமுக்கி வெளியே எட்டிப்பார்த்த சரித்ரத்தாலேயறியலாம். இவ்விஷயம் ''சிக்கென'' (திருவாய்2–6–2)என்ற பாசுர வ்யாக்₂யாநமான இருபத்துநாலாயிரத்தில் சுருக்கமாகவும், ஈட்டில் விஸ்தரமாகவும் கூறப்பட்டுள்ளது. ''இங்கே ஆளவந்தாருக்கு குருகைக்காவலப்பன் அருளிச்செய்ததாக அருளிச்செய்யும் வார்த்தை'' என்றுள்ள பங்க்தியை அநுப₄விக்க வேண்டும். யதிராஜஸப்ததி வ்யாக்₂யானத் திலும் இவ்விஷயம் பெரியோரால் கூறப்பட்டுள்ளது. இப்படி ஆழ்வார் அபி₄மானம் பெற்ற சொட்டைக்குலத்தில் உதித்தவர் நம்ஆளவந்தார். அவருக்கு கீ₃தார்த்த₂ங்களை மணக்கால்நம்பி உபதே₃ஶித்தருளினர். மணக்கால்நம்பி ஸ்ரீராமமிஶ்ரர். அவர்தாம் ''ஸமா த்₃வாத₃ஶ தத்ராஹம் ராக₄வஸ்ய நிவேஶநே'' என்னும்படி பன்னிரண்டாண்டு ஆசார்யன் திருமாளிகையிலே ஸேவை பண்ணிப் படியாய்க்கிடந்து ''மணக்கால் நம்பி'' என்றும் திருநாமத்தை யுடையவர்.

இவர் தனியன் ''அயத்நதோ யாமுநமாத்மதா₃ஸம் அலர்க்கபத்ரார்ப்பண

நிஷ்க்ரயேண ய: க்ரீதவாந் ஆஸ்த்தி$_2$தயௌவராஜ்யம் நமாமி தம் ராமம் அமேய ஸத்வம்'' என்பதாகும். மணக்கால்நம்பி ஆளவந்தாரை பச்சை(தூதுவளைக் கீரை)யிட்டுத் திருத்தி கீ$_3$தார்த்த$_2$ங்களை அருளிச்செய்தார் என்பது கு$_3$ருபரம்பரா ப்ரஸித்$_3$த$_4$ம். தே$_3$ஶிகர் யதிராஜஸப்ததியில் மணக்கால்நம்பியை

''அநுஜ்ஜி$_2$த க்ஷமாயோக$_3$ம் அபுண்யஜநப$_3$ாத$_4$கம்
அஸ்ப்ருஷ்ட மத$_3$ராக$_3$ம் தம் ராமம் துர்யமுபாஸ்மஹே''

என்று அநுப$_4$வித்துள்ளார். மணக்கால்நம்பி என்ற ஸ்ரீராமமிஶ்ரர் நான்காவது இராமன் ஆவார். இவர்க்கு முன்னே ஸ்ரீபரசுராமனும், ஸ்ரீத$_3$ஶரத$_2$ராமனும், ஸ்ரீப$_3$லராமனுமாக மூன்று இராமர்கள் உள்ளனர். அவர்களில் வேறுபட்டவர் இவர் நான்காவது இராமனை ஸ்ரீராமமிஶ்ரர் (மணக்கால்நம்பி) என்று தே$_3$ஶிகர் விசித்ரமாக அநுப$_4$வித்துள்ளார்.

ஆளவந்தார் மணக்கால்நம்பி உபதே$_3$ஶமடியாக கீ$_3$தார்த்த$_2$ங்களை உள்ளபடியறிந்து மணக்கால்நம்பி புருஷகாரமாக கீ$_3$தார்த்த$_2$மான பெரியபெருமாளையும் ஸேவிக்கப்பெற்று விஷயாந்தரஸங்க$_3$த்தை ஸவாஸநமாக விட்டுத் துரீயாஶ்ரமம் பூண்டு யதிகட்கிறைவன் ஆனார் என்பதும் கு$_3$ருபரம்பரா ப்ரோக்தம்.

மணக்கால்நம்பி உபதே$_3$ஶிக்கத் தான் அறிந்த கீ$_3$தார்த்த$_2$ங்களை ஆளவந்தார் கீ$_3$தார்த்த$_2$ஸங்க்$_3$ரஹ மூலமாக வெளியிட்டருளினார்.

இந்த க்$_3$ரந்த$_2$த்திலே ஶ்லோகங்கள் முப்பத்திரண்டாகும். கடைசியில் ''இதி கீ$_3$தார்த்த$_2$ஸங்க்$_3$ரஹ:'' என்று அருளிச்செய்துள்ளார். அவ்விடத்தில் தே$_3$ஶிகன் ஸங்க்$_3$ரஹரக்ஷையில் ''இத்த$_2$மேவ ஸத்த்வநிஷ்ட$_2$ ஸம்ப்ரத$_3$ாய பரம்பராக$_3$த: ஸமீசீந: கீ$_3$தார்த்த$_2$:। ந புந: குத்$_3$ருஷ்டிபி$_4$ருந்நீத: ஸசைஷ ஸ்வயோக$_3$ மஹிம சுலகித பரமபுருஷ விபூ$_4$தியுக$_3$ள ப$_4$க$_3$வந் நாத$_2$முநி நியோக$_3$ாநுவர்த்தி ஸ்ரீமத்$_3$ராமமிஶ்ரஸகாஶாத்$_3$ ப$_3$ஹுஶாஸ்த்ரவித்$_3$பி$_4$: அஸ்மாபி$_4$: ப$_3$ஹுஶ: ஶ்ருதஸ்ய ப$_4$க$_3$வத்$_3$ கீ$_3$தார்த்த$_2$ ப்ரபஞ்சஸ்ய ஸங்க்$_3$ரஹ:'' என்று பரமாசார்யரான ஆளவந்தார் திருவுள்ளத்தை நன்கு அநுக்$_3$ரஹித்துள்ளார். கீ$_3$தார்த்த$_2$ ஸங்க்$_3$ரஹத்தில் முதற்கண் நான்கு ஶ்லோகங்கள். பிறகு பதினெட்டு அத்$_4$யா யார்த்த$_2$ங்களை ஸங்க்$_3$ரஹிக்கும் பதினெட்டு ஶ்லோகங்கள். முடிவில் பத்து ஶ்லோகங்கள். ஆக முப்பத்திரண்டு ஶ்லோகங்களாக அமைந்தது ஸ்ரீகீ$_3$தார்த்த$_2$ ஸங்க்$_3$ரஹம்.

கீ$_3$தார்த்த$_2$ஸங்க்$_3$ரஹத்தில் இறுதியில் ஜ்ஞாநி வைப$_4$வமருளிச் செய்கிறார் ஆளவந்தார் ''ஜ்ஞாநீ து பரமைகாந்தீ'' என்று தொடங்கி. இங்கே ஆளவந்தார் ஸ்வாமிநம்மாழ்வாரான ஜ்ஞாநியைத் திருவுள்ளம் பற்றியே இச்லோகங்களை அருளிச்செய்துள்ளார் என்று தோன்றுகிறது.

''ஜ்ஞாநீ து பரமைகாந்தீ தத$_3$ாயத்தாத்மஜீவந:
தத்ஸம்ஶ்லேஷ வியோகைக$_3$ ஸுகது$_3$க்க$_2$: தத$_3$கதீ$_4$:''

என்று கீ3தார்த்த2ஸங்க்3ரஹத்தில் இருபத்தொன்பதாம் ஶ்லோகமாகும். இங்கே ஸ்ரீவைஷ்ணவலக்ஷணமாகக் கூறப்பட்டவையெல்லாம் நம்மாழ்வாருக்கு மிகப்பொருந்தியவையேயாகும். ''பரமைகாந்தீ'' என்ற பத3த்தில் கூறப்பட்ட பாரமைகாந்த்யமாவது ''அநந்யதே3வதாகத்வமும் அநந்யப்ரயோஜநத்வமு மாகும்''. அதாவது தே3வதாந்தரஸம்ப3ந்த4மும், அற்று ப்ரயோஜநாந்தர ஸம்ப3ந்த4முமற்றிருக்கை என்றபடி.

ஆழ்வார் கண்ணனைத்தவிர மற்றோர் தெய்வம் பேணாதவர் என்பது அவர் பாசுரங்களில் வ்யக்தம். இதற்குப் பல பாசுரங்களை நாம் காணவியலும். ஒரு பாசுரத்தைத் தெரிவிக்கிறேன். ''உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள் அவனையல்லால்'' என்ற திருவாய்மொழிப் பாசுரம் (4–6–10) ஒன்றேயமையும். இப்பாசுரத்தின் வ்யாக்2யானமாக ஈட்டில் ஸ்ரீராமாயண ஶ்லோகம் ஒன்று உத3ாஹரிக்கப்பட்டுள்ளது. 'அநந்யதை3வத்வம்' என்ற ஶ்லோகமேயது. ஸீதாப்பிராட்டி சக்ரவர்த்தித்திருமகனையொழிய ஒருதெய்வம் அறியாள். அதேபோலே நம்மாழ்வாரும் கண்ணனையல்லால் தெய்வமறியார் என்றவாறு. ''கண்ணல்லால் தெய்வம் இல்லை'', ''நம் கண்ணன் கண் அல்லது இல்லையோர் கண்ணே'' (திருவாய்.2–2–1) என்ற பாசுரங்களையும் காணலாம். இதுவே அநந்யதை3வத்வம். அவ்வோபாதி ஸ்ரீவைஷ்ணவன் அநந்யப்ரயோஜநனு மாவான். ''உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்'' (திருவாய். 6–7–1) என்று ஆழ்வார் கண்ணனையே த4ாரகனையும் போஷகனையும் போ4க்3யனாகவும் கொண்டார் என்று விளங்குகிறது. இதுவே பாரமைகாந்த்யம். இதுவே ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம். இவரே மஹாத்மா. ''வாஸுதே3வ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுது3ர்லப4:'' என்பதே கீ3தாசார்யன் வாக்கு. ''வாஸுதே3வ ஏவ மம பரமப்ராப்யம் ப்ராபகம் ச அந்யத3பி யந் மநோரத2வர்த்தி ஸ ஏவ மம தத் ஸர்வம் இதி மாம் ப்ரபத்3யதே மாமுபாஸ்யதே ஸ மஹாத்மா மஹாமநா:'' என்று எம்பெருமானார் அருளிச்செய்த கீ3தாபா4ஷ்யத்தையும் நோக்குங்கால் இவ்விஷயம் வ்யக்தமாகும். ''தத்ஸம் ஶ்லேஷ வியோகை3க ஸுகது3க்க2:'' என்பதும் ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணமாக ஆளவந்தாராலே கூறப்பட்டுள்ளது. ஆழ்வார் ப4க3வத்ஸம்ஶ்லேஷத்தால் ஆநந்தி3ப்பதும், ப4க3வத்3விரஹத்தால் க்லேஶப்படுவதும் அவர் பாசுரங்களில் ஸ்புடம். ''ஊனில் வாழுயிரே'', ''வீற்றிருந்து'', ''இருத்தும் வியந்து'' முதலான திருவாய்மொழிகளிலே ப4க3வத் ஸம்ஶ்லேஷத்தாலே ஆநந்த3ப்படுவதையும், ''வாயுந்திரை'' ''ஆடியாடி'' ''கங்குலும்பகலும்'' முதலான திருவாய்மொழிக ளிலே ப4க3வத்விரஹத்தாலே ஆழ்வார் க்லேஶப்படுவதையும் காணலாம்.

மேலும் பா4க3வத லக்ஷணத்தை ''ப4க3வத்3 த்4யாந யோகே3ாக்தி வந்த3ந ஸ்துதி கீர்த்தனை: லப்3த4ாத்மா'' என்று ஆளவந்தார் அருளிச்செய்கிறார்.

அவ்விடத்திய கீதார்த்தஸங்க்ரஹ ரக்ஷையில் ''யோக: விஶிஷ்ட க்ஷேத்ராதி வர்த்திந: பரஸ்ய அபிகமநம்'' என்று விளக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீபாகவதத்தில் ''பாதௌ ந்ருணாம்தௌ த்ருமஜந்மபாஜௌ க்ஷேத்ராணி நாநுவ்ரஜதோ ஹரேர் யௌ'' (2–3–22) என்று கூறப்பட்டுள்ளது என்றும் தேஶிகன் விவரித்துள்ளார்.

திவ்யதேஶயாத்ரை செய்வது ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம் என்றபடி. திவ்யதேஶயாத்ரை செய்யாதவன் கால் மரக்கால் என்று ஸ்ரீபாகவதம் கூறுகிறது என்றருளிச்செய்கிறார் தேஶிகன்.

ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம் கூறுமிடத்துப் பிள்ளைஉலகாரியன் ''உகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய்'' என்றருளிச்செய்தார். ஆக ஆளவந்தார் திருவுள்ளப்படி நாமும் திவ்யதேஶப்ராவண்யமும், அர்ச்சா ப்ராவண்யமும், அருளிச்செயலில் ப்ரேமமும் கொண்டு ஒழுகுவோமாக.